# “புகழ் அனைத்தும் உமதே”

## வாரம் 2020

## 16 – 24 மே 2020

## அனைத்தும் தொடர்புடையனவே!



மனிதவள மேம்பாட்டு அலுவலகம்
காலநிலை மாற்றப் பிரிவு
ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பு (FABC)
தமிழக சமூகப் பணி மையம் (TASSOS), திருச்சி

இணையதளப் பங்காளர்கள்

ஒருங்கிணைந்த மனிதவள மேம்பாட்டுக்கான வத்திக்கான் ஆணையம்

உலகளாவிய கத்தோலிக்க காலநிலை இயக்கம்

# “புகழ் அனைத்தும் உமதே”

## வழிபாட்டு வாரம் 2020

## 16–24 மே 2020

**அனுமதி**

**மேதகு பேராயர் அந்தோணி ஆனந்தராயர்**

தலைவர், தமிழக ஆயர் பேரவையின்

திருவழிபாட்டுப் பணிக்குழு

**தயாரிப்பு**

**அருள்பணி. முனைவர் S. அற்புதராஜ்**

பொதுச் செயலர்

தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு

முப்பணி மையம், திண்டிவனம்

2020

வரலாற்றையே மாற்றும் நிகழ்வுகளின் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து நல் உலகை எவ்வாறு கட்டியெழுப்பவேண்டும் என்பதை "புகழ் அனைத்தும் உமதே" (Laudato Si) என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது மடல் நமக்கு கற்பிக்கிறது. மக்கள் எல்லா இடத்திலும் ஒரு எதிர்பார்ப்புடன், நம்பிக்கைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பாதைக்கு ஒளியூட்ட இறை நம்பிக்கை நம் உடனடித் தேவையாக உள்ளது. மே 16–24, 2020–ஐ முன்னிட்டு "புகழ் அனைத்தும் உமதே" வாரத்தைக் கொண்டாட நேர்மையான, நிலையான எதிர்காலத்திற்காக கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் தோழமையில் ஒன்றிணைகின்றோம். சிறந்த நாளைய எதிர்காலத்தை கட்டியெழுப்பும் வண்ணமாக இந்நெருக்கடியான காலத்தில் சகோதர, சகோதரிகளாக நம்பிக்கையில் ஒன்றிணைந்து நிற்கிறோம்.

**எனவே நாம் செய்யவேண்டியவை :**

- மே 16–23 வரை மேற்கண்ட இலக்கினைச் சிந்தித்து சமூகத் தொடர்பு ஊடகங்கள் வழியாக இதற்காகத் தயாரிக்கலாம், தியானிக்கலாம்.
- மே 24, 2020–ல் உலகளாவிய இறைவேண்டல் நாளில் இணையலாம்.
- நாம் தயாரிப்பவற்றை 2020 செப்டம்பர் 1–லிருந்து அக்டோபர் 2020 வரையிலான படைப்பின் காலத்தின்போது செயல்படுத்தலாம்.

**பல்வேறு மூலங்களிலிருந்து இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டிருக்கிறது**

| தேதி | நாள் | பரிந்துரைக்கப்படும் செயல்பாடு |
|---|---|---|
| 16 மே 20 | சனி | ஆன்ம சோதனை |
| 17 மே 20 | ஞாயிறு | படைப்பிற்காக "புகழ் அனைத்தும் உமதே" செபம் |
| | | You Tube–ல் காணொளி பார்த்து தியானித்தல் |
| 18 மே 20 | திங்கள் | செபமாலை செபித்தல் – மகிழ்வின் மறையுண்மை |
| 19 மே 20 | செவ்வாய் | செபமாலை செபித்தல் – துயரின் மறையுண்மை |
| 20 மே 20 | புதன் | செபமாலை செபித்தல் – மாட்சியின் மறையுண்மை |
| 21 மே 20 | வியாழன் | செபமாலை செபித்தல் – ஒளியின் மறையுண்மை |
| 22 மே 20 | வெள்ளி | கார்பன் பதிவுக்கான அமர்வு |
| | | இறை இரக்க செபமாலை |
| 23 மே 20 | சனி | "புகழ் அனைத்தும் உமதே" உறுதிமொழி |
| | | தனிப்பட்ட அர்ப்பணம் |
| 24 மே 20 | ஞாயிறு | இயற்கையோடு இணைந்து வாழ நடைமுறைப் பரிந்துரைகள் – சிந்திக்க, தியானிக்க |
| | | உலகளாவிய இறைவேண்டல் நாள் |

# ஒளியின் மறையுண்மைகள்

## செபமாலைச் சிந்தனைகள்

## (LAUDATO SI = புகழ் அனைத்தும் உமதே!)

## 21 மே 2020, வியாழன்கிழமை

### முதலாவது ஒளியின் மறையுண்மையில்

### இயேசு யோர்தான் ஆற்றில் திருமுழுக்குப் பெற்றதைத் தியானிப்போமாக

அக்காலத்தில் இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர் ஆற்றிலிருந்து கரையேறிய உடனே வானம் பிளவுபடுவதையும் தூய ஆவி புறாவைப் போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது, ''என் அன்பார்ந்த மகன் நீயே உன்பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்'' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது'' (மாற்கு 1:9–11).

அன்னை மரியே! நாங்கள் எங்களது திருமுழுக்கு வாக்குறுதிகளை எமது வாழ்வில் நிறைவேற்ற, உம் திருமகன் எங்களுக்கு அருள்தர, அவரிடம் பரிந்து பேசும். இறைவார்த்தையிலும், அருளடையாளங்களிலும் இறைவனுடன் இணைந்திருப்பதன் மூலம் நாங்கள் எங்கள் வாழ்வையே இறைவனுக்கு அர்ப்பணிக்கவும், இதன் மூலம் இறைவன் எங்கள் வழியாக மனித வரலாற்றிலும், படைப்பனைத்திலும் ஊடுருவவும், அதை மேம்படுத்தவும், பாதுகாக்கவும், புதுப்பிக்கவும் வேண்டிய வரத்தை எமக்கு தந்தருளும். நாங்கள், வியாபாரம், தொழில், அரசு அலுவல்கள், வீடுகள் மற்றும் எங்களோடு தொடர்பில் இருக்கும் அனைத்தையும் இறையன்பினால் புதுப்பிக்க உதவியருளும்.

### இரண்டாவது ஒளியின் மறையுண்மையில்

### இயேசு கானாவூர்த் திருமணத்தில் தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றியதைத் தியானிப்போமாக

''இயேசுவின் தாய் பணியாளரிடம், அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்றார். யூதரின் தூய்மைச் சடங்குகளுக்குத் தேவையான ஆறு கல்தொட்டிகள் அங்கே இருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர்கொள்ளும். இயேசு அவர்களிடம், ''இத்தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள்'' என்று கூறினார். அவர்கள் அவற்றை விளிம்பு வரை

நிரப்பினார்கள். பின்பு அவர், “இப்போது மொண்டு பந்தி மேற்பார்வையாளரிடம் கொண்டு போங்கள்” என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள்” (யோவா 2:5–8).

அன்னை மரியே! நாங்கள், எங்களின் சாதாரண மனநிலைகளிலிருந்து உயரவும், இதன் மூலம் எங்களுக்கு நெருக்கமானவர்களோடும் இதுவரை நாங்கள் இன்னும் சந்திக்காத மனிதர்களோடும் எங்களிடம் இருக்கும் சிறந்தவற்றை பகிர்ந்து கொள்ள உம் திருமகன் எங்களுக்கு வரமருள்வாராக. மேலும் அன்றாட உலகுசார் காரியங்களில் எங்கள் வாழ்வை புதுப்பித்தருளும். நாங்கள் எமது உடனடித் தேவைகளையும், விருப்பங்களையும் கடந்து, அதைவிட மேலான சமூக பொதுத் தேவைகளையும், மனித குலம், எல்லா உயிர்கள் மற்றும் படைப்பு அனைத்தின் தேவைகளையும் கருத்தில் தேர்ந்து தெளிய தந்தருளும்.

## மூன்றாவது ஒளியின் மறையுண்மையில்

### இயேசு இறையாட்சியைப் போதித்ததைத் தியானிப்போமாக

“காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது; மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்று அவர் கூறினார் (மாற்கு 1:15).

அன்னை மரியே! நாங்கள் இயேசுவின் வாக்குறுதிகளிலும், அவர் வார்த்தை விடுக்கும் சவால்களிலும் நம்பிக்கை கொண்டு வாழ உம் திருமகன் எங்களுக்கு அருள் தர, அவரிடம் மன்றாடும். மேலும் எங்களில் இருக்கும் எல்லா வகை தீமைகளிலிருந்தும், நிலையான பேரின்பம் தரும் இறைவனை நாடாமல், இவ்வுலக நாட்டங்களை நாடும் ஊனியல்பு மனநிலைகளிலிருந்தும், அழிந்து வரும் இயற்கை வளங்களிலிருந்து இன்பம் தேடும் தீமைகளிலிருந்தும் நாங்கள் மனமாற எமக்கு உதவியருளும். காலம் நிறைவேறிவிட்டது என்பதனை கண்டுணர அருள்தாரும். நாங்கள் விரும்புகின்ற எங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும், இறைவனோடு கூடிய நிலைவாழ்வையும் பெற்றுத் தரும் கிறிஸ்துவைப் பின்பற்ற அருள்தாரும்.

## நான்காவது ஒளியின் மறையுண்மையில்

### இயேசு தாபோர் மலையில் தோற்றம் மாறியதைத் தியானிப்போமாக

“அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்ந்தது. அவருடைய ஆடைகள் ஒளிபோன்று வெண்மையாயின. இதோ! மோசேயும் எலியாவும் அவர்களுக்கு முன்தோன்றி இயேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தனர். பேதுரு இயேசுவைப் பார்த்து,

“ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைக்கட்டுமா? இது உமக்கு விருப்பமா?” என்றார். அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது ஒளிமயமான மேகம் ஒன்று அவர்கள்மேல் நிழலிட்டது. அந்த மேகத்தினின்று, “என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர்பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்குச் செவிசாயுங்கள்” என்று ஒரு குரல் ஒலித்தது” (மத்தேயு 17:2–5).

அன்னை மரியே! நாங்கள் இறைவனின் மாட்சியை ஒவ்வொரு மனிதரிலும், எல்லாப் படைப்புகளிலும் காண, உம் திருமகன் எங்களுக்கு அருள்தர அவரிடம் மன்றாடும். எங்களுடைய எல்லா செபங்களும், எம் அருள் வாழ்வும் வீழ்ந்துள்ள அவனிக்கு அமைதியையும், நீதியையும், அன்பையும் வழங்குவதற்காகவே உள்ளன என்றும், மேலும் பாவத்தினால் நச்சாக்கப் பட்டுள்ள அனைத்தையும் புதுப்பிப்பதற்காகவுமே உள்ளன என்பதை மறவாதிருக்க வரம் தந்தருளும்.

அன்னை மரியே! நாங்கள் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய புண்ணியங்களால் உருமாற்றமடைய உதவி புரிந்தருளும்.

## ஐந்தாவது ஒளியின் மறையுண்மையில்

### இயேசு நற்கருணையை ஏற்படுத்தியதைத் தியானிப்போமாக

“அவர்கள் உணவருந்திக்கொண்டிருந்தபொழுது இயேசு அப்பத்தை எடுத்துக் கடவுளைப் போற்றி, அதைப் பிட்டுச் சீடருக்குக் கொடுத்து, “இதைப் பெற்று உண்ணுங்கள்; இது எனது உடல்” என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்து, “இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்; ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்.”

எங்கள் அன்பு அன்னையே! நாங்கள் திரு அவையோடு ஒன்றித்திருப்பதன் மூலம் உம் திருமகனோடு ஒன்றித்திருக்க அருள்தர உம் திருமகனிடம் மன்றாடும். மேலும் நற்கருணையில் நாங்கள் மட்டுமல்ல, இந்த பிரபஞ்சமே மீட்கப்படுகின்றது என்பதை உணர உதவியருளும். அன்னை மரியே! திருப்பலியில் ஒப்புக்கொடுக்கப்படும் அப்பமும், இரசமும் உண்மையிலேயே நிலத்தின் விளைச்சலாகவும், மனித உழைப்பின் பயனுமாக உள்ளன என்பதை நாங்கள் கண்டுணர எமக்கு உதவியருளும்.

**குறிப்பு :**

மொழியாக்கத்தில் உதவிய அருள்பணி. மி. ஜான் திரவியம், மதுரை, அருள்பணி. ம. பிலோமின்தாஸ் அவர்களுக்கு நன்றிகள்.